ABS
சிங்கப்பூர் வங்கிகள் சங்கம்

CASE

# உங்கள் கடன் அட்டைகளைப் பாதுகாத்திடுக...

## உங்கள் ரொக்கத்தைப் போலவே

வாழ்க்கைக்குச் சிறந்த தேசிய பொருளாதாரத் திட்டம்
சிங்கப்பூருக்கான தேசிய பொருளாதாரக் கல்வி நிகழ்ச்சி

எதிர்வரும் 1 நவம்பர் 2009 முதல், உங்கள் கடன் அட்டை தொலைந்துவிட்டதாக அல்லது திருட்டுப்போய்விட்டதாக நீங்கள் தகவல் தெரிவிப்பதற்குமுன் அதிகாரமின்றி செய்யப்பட்ட செலவுகளுக்கு அட்டைதாரர்கள் ஏற்கும் பொறுப்புக்கு வங்கிகள் வரம்பு விதிக்கும். ஆனால் நீங்கள் மோசடி செய்தால், கவனக்குறைவுடன் நடந்துகொண்டால், அல்லது உங்கள் அட்டை தொலைந்துவிட்டது அல்லது திருட்டுப்போய்விட்டது என்பது தெரிந்தவுடனே வங்கியிடம் தெரியப்படுத்தத் தவறினால், உங்கள் அட்டையைப் பயன்படுத்தி செய்யப்பட்ட அதிகாரமற்ற பரிவர்த்தனைகளுக்கு நீங்களே பொறுப்பேற்க நேரிடும்.

## உங்களைப் பாதுகாத்திட:

1. கடன் அட்டைகளை ரொக்கப்பணம் போலக் கருதவும். அவற்றை -- அல்லது அவற்றின் விவரங்கள் கொண்ட பத்திரங்களை -- திருட்டுப்போகக்கூடிய இடங்களில் ஒருபோதும் வைக்கக்கூடாது.
2. கடன் அட்டைகள் கைக்குக் கிடைத்தவுடனே நிரந்தர மையால் அதில் கையொப்பமிடவும்.
3. உங்கள் கடன் அட்டை விவரங்களை உங்களுக்கு அறிமுகமில்லாதவர்களிடம் தரவேண்டாம். உங்கள் PIN இரகசிய எண்ணையும் மறைச்சொல்லையும் மனப்பாடம் செய்து கொள்ளவும். இவ்விவரங்களை வேறு எவரிடமும் வெளியிடக்கூடாது.
4. தொலைபேசிவழி, இணையம்வழி பொருள் வாங்கும்போது, நம்பிக்கையான, சட்டப்படி செயல்படும் கடைகளில் வாங்கவும். குறைந்த கடன் வரம்புள்ள கடன் அட்டையைப் பயன்படுத்தவும். மற்றவர்களும் பயன்படுத்தும் கணினியைப் பயன்படுத்தவேண்டாம்.
5. கடன் அட்டை விவரங்கள் கொண்ட விற்பனை சீட்டுகள், அறிக்கைகள், இதர பத்திரங்கள் ஆகியவற்றைப் பத்திரமான இடத்தில் வைத்திருக்கவும். அவற்றை வீசும்போது, கிழித்தெறியவும். காலாவதியான கடன் அட்டைகளை வெட்டி வீசவும்.
6. உங்கள் கடன் அட்டை எண்கள், அட்டை வழங்கிய வங்கிகளின் தொலைபேசி எண்கள் ஆகிய விவரங்களைப் பத்திரமாக இடத்தில் குறித்து வைத்திருக்கவும்.
7. உங்கள் செலவுக்கட்டண அறிக்கைகளை உடனுக்குடன் சரிபார்க்கவும், குறிப்பாக ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திற்குப் பிறகும். ஏதேனும் பிழைகள் தெரிந்தால், உடனடியாக வங்கியுடன் தொடர்பு கொள்ளவும்.
8. உங்கள் கடன் அட்டைகள் எப்போதும் உங்களிடம் இருப்பதை உறுதிப்படுத்திட அடிக்கடி கவனிக்கவும்.
9. உங்கள் கடன் அட்டை அல்லது அட்டை விவரம் களவுபோனால் அல்லது தொலைந்துவிட்டால், உடனடியாக வங்கியிடம் தெரியப்படுத்தவும். தகவல் தெரிவித்த தேதியையும் நேரத்தையும் குறித்துக் கொள்ளவும்.

**மேலும் குறிப்புகள் அறிய, www.abs.org.sg மற்றும் www.moneysense.gov.sg இணையத்தளங்களில் "கடன் அட்டைகள் -- நீங்கள் அறிய வேண்டியவை" எனும் சிங்கப்பூர் வங்கிகள் சங்க--நிதிநுட்ப வழிகாட்டியைப் பார்க்கவும்.**